தீர்மானங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் முன்னதாகவே மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்ட அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள் மற்றும் மானியக் கோரிக்கைகளின்மீது உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்திலுள்ள சட்டமுன்வடிவு-1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "16-9-2020 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்ற 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020) திரும்பப் பெற அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2021 பிப்ரவரி 27] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை திரும்பப் பெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவு திரும்பப்பெறப்பட்டது.*

முற்பகல் 11–20

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2020–2021, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020–2021 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தழைத்திட மனிதராய் பிறப்பெடுத்து மகத்தான செயல் புரிந்த தெய்வப் பிறவிகள், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகின்றேன்.@

கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் இதர அவசரத் தேவைகளின் காரணமாக அரசுக் கணக்கில் ஏற்பட்ட கூடுதல் செலவினங்கள் சார்ந்த இனங்கள் இறுதித் துணை மதிப்பீடுகளில் உள்ளடங்கும். ஜனநாயக மரபுகள் கடைபிடிக்கப்பட வேண்டுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தலை நேற்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்ததால், வழக்கமாக சில முக்கிய செலவினங்களின் இனங்களைக் குறிப்பிடுவது தற்போது உகந்ததாக இருக்காது. கூடுதல் செலவினங்களைச் சார்ந்த

@ *576 முதல் 582 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ன*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2021 பிப்ரவரி 27

விவரங்கள் இறுதித் துணை மதிப்பீட்டுப் புத்தகத்தில் உள்ளன. கூடுதல் செலவினங்களின் அனைத்து இனங்களுக்கும் அரசு ஆணைகள் மற்றும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன அல்லது அவை செயல்பாட்டில் உள்ள திட்டங்களுக்கான கூடுதல் செலவினங்கள்தான் என்று இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இறுதித் துணை மதிப்பீடுகளில் எந்தவொரு புதிய திட்டத்தின் அறிவிப்போ அல்லது செலவினங்களுக்கான புதிய இனங்களோ சேர்க்கப்படவில்லை. சட்டமன்றத் தேர்தலை நடத்துவதற்காக 102.93 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதில் மானியக் கோரிக்கை எண் 38, பொதுத் துறையின்கீழ் 102.38 கோடி ரூபாய் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும். இறுதித் துணை மதிப்பீடுகள் மொத்தம் 21,172.82 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 17,790.85 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 3,351.97 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	7	–	25,00
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	–	–
3	நீதி நிருவாகம்	14,33,07	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	7,89,42	3,72,69	–

2021 பிப்ரவரி 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
5	வேளாண்மைத் துறை	*74*	*7*	–
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*306,72,27*	*43,15,50*	–
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*10,95,80*	*5*	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*10,14,58*	–	–
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	*13,26,47*	*42,29,87*	–
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*56,43,70*	*8,23*	–
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*14*	–	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2021 பிப்ரவரி 27

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	479,61,08	2,12,94	2,54,44
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	12	3	–
14	எரிசக்தித் துறை	4,085,60,02	345,90,57	1
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1	–	–
16	நிதித் துறை	20	1	1
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	138,17,60	–	23,57
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	5,58,08	–	–
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,486,70,28	597,09,69	–
20	உயர் கல்வித் துறை	165,24,33	5	–

2021 பிப்ரவரி 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	21	45	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9,32,85	4	25,50,62
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9	1	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10	1,17,55	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	10,55,14	–	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	14	1	–
27	தொழில் துறை	10	18,21,98	390,73,27
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	24,63,79	–	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2021 பிப்ரவரி 27

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	13,08,34	10	94,47
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	16	1,89,73	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	4,39,05	–	15,00
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	62	5	77,50
33	சட்டத் துறை	10,11	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	13,05	22,52,53	30,00,00
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	11	2	–
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	5	–	–
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	6	–	–

2021 பிப்ரவரி 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
38	பொதுத் துறை	140,97,67	–	15,91,25
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	92,74,68	21	7,00
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	375,25,67	1,005,30,32	–
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	2,54,27	63,90	48,47
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	34	4	–
43	பள்ளிக் கல்வித் துறை	99,32	110,42,40	–
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	24	4	5,04,03
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	2,00,38	17,70,92	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	46,48	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	13,48,97	–	–